

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## புதிய வீட்டுச் சாவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு

**» தற்போது என்னிடம் ஒரு வீடு உள்ளது, அவ்வீட்டை விற்று அதிலிருந்து வரும் தொகையை புதிய வீட்டிற்கு பயன்படுத்த விரும்புகிறேன். இதை நான் எவ்வாறு செய்யலாம்?**

உங்களுடைய தற்போதைய வீட்டை முன் கூட்டியே விற்பதற்கு திட்டமிடுங்கள். இவ்வீட்டை விற்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்போது, உங்கள் புதிய வீட்டின் சாவியைப் பெற்றுக்கொள்ளும்படி அழைக்கப்பட்டால், உங்கள் புதிய வீட்டை வாங்க உதவ, காண்ட்ரா பணம் செலுத்தும் வசதி (Contra Payment Facility) அல்லது தற்காலிக கடன் திட்டத்திற்கு (Temporary Loan Scheme) விண்ணப்பித்திடலாம்.

காண்ட்ரா பணம் செலுத்தும் வசதி (Contra Payment Facility) அல்லது தற்காலிக கடன் திட்டம் (Temporary Loan Scheme) குறித்த மேல் விவரங்களுக்கு, கீழே உள்ள இணைப்புகளுக்கு செல்லுங்கள் அல்லது க்யூ ஆர் (QR) குறியீடுகளை ஸ்கேன் செய்யுங்கள்:

**Contra Payment Facility:**
go.gov.sg/hdb-contra-payment

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

**Temporary Loan Scheme:**
go.gov.sg/hdb-temp-loan-scheme

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

**» எங்களுடைய புதிய வீடு திருமணமாகவிருக்கும் தம்பதிகள் திட்டத்தின் (Fiance-Fiancee Scheme) கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் எப்போது எங்களுடைய திருமணச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்?**

இத்திட்டத்தின் கீழ், நீங்கள் வீட்டின் சாவியைப் பெற்றுக்கொண்ட 3 மாதங்களுக்குள் திருமணம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நீங்கள் வெளிநாட்டில் திருமணம் செய்துகொண்டால், உங்கள் திருமணச் சான்றிதழின் புகைப்பட நகலை எங்களுக்குச் சமர்ப்பிக்கவும்.

**» நான் வீட்டைத் தேர்வு செய்தபோது வீட்டின் அம்சங்களை விருப்பத்திற்கேற்பத் தேர்வு செய்யும் திட்டத்தின் (OCS) கீழ் உள்ள அம்சங்களை தேர்வு செய்யாதிருந்தால், இப்போது அதை செய்திடலாமா?**

வீட்டை தேர்வு செய்தபோது நீங்கள் OCS அம்சங்களை தேர்வு செய்யாதிருந்தால், இப்போது உங்களால் அதை செய்ய முடியாது. ஏனெனில் ஒப்பந்தக்காரர் கட்டடக் கட்டுமானத்திற்கான பொருட்களை ஆர்டர் செய்து அவற்றைப் பொருத்தியிருப்பார்கள்.

**» OCS திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அம்சங்கள் யாவை?**

மேல்விவரங்களுக்கு,
go.gov.sg/hdb-booking-flat-ocs
இணைப்புக்கு செல்லுங்கள் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

**» வீட்டின் அம்சங்களை விருப்பத்திற்கேற்பத் தேர்வு செய்யும் திட்டத்தின் (OCS) கீழ் நான் என்ன தேர்வு செய்தேன் என்று ஞாபகமில்லை. இப்போது அதை நான் எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்?**

நீங்கள் வீட்டைத் தேர்வு செய்தபோது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட OCS விருப்பத்தேர்வு படிவத்தை பார்த்து, உங்கள் தேர்வை தெரிந்துகொள்ளலாம். உங்கள் விருப்பத்தேர்வு படிவத்தை நீங்கள் தொலைத்துவிட்டீர்களானால்,

உதவிக்காக go.gov.sg/hdb-write-to-us மூலம் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் எங்களை தொடர்புகொள்ளுங்கள்.

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

T900



# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

mynicehome ROADSHOW

## புதிய வீட்டுச் சாவியைப் பெற்றுக்கொள்ளுதல்

### » ஃபிளாட்டுகளின் சாத்தியமான நிறைவு தேதி (PCD) எப்போது?

சமீபத்திய PCD தகவல்களைப் பார்ப்பதற்கு, உங்கள் சிங்பாஸைப் பயன்படுத்தி www.hdb.gov.sg என்ற இணையத்தளத்தில் உள்ள HDB InfoWEB-இல் இருந்து MyHDB Page- க்குள் நுழையலாம்.

Select My Flat > Application Status > New Flat > click on your registration number

PCD என்பது உத்தேசமான தேதியாகும். உண்மையான நிறைவுத் தேதி, கட்டுமானம் நடைபெறும் வேகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

குடியிருப்புப் புளோக்கின் கட்டுமானம் நிறைவடையும் போது உங்கள் வீட்டின் சாவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

### » சாவியைப் பெற்றுக்கொள்வதற்கான தேதி எனக்கு எவ்வாறு தெரிவிக்கப்படும், மற்றும் நான் என்ன செய்ய வேண்டும்?

சாவியைப் பெற்றுக்கொள்வதற்கான தேதி மற்றும் நேரம் குறித்து, உங்களுக்கு வீவகத்திடமிருந்து குறுந்தகவல் அல்லது மின்னஞ்சல் அனுப்பப்படும். ஒருவேளை நீங்கள் வீவகத்திடம் உங்கள் கைத்தொலைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை கொடுக்கவில்லையென்றால், உங்கள் புதிய வீட்டுச் சாவியை பெறுவதற்கான நாள்/தேதி முன்னேற்பாட்டுக் கடிதம் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கடிதத்தில் மீதமுள்ளத் தொகையை நீங்கள் எந்த முறையில் செலுத்த வேண்டும், சாவியைப் பெற்றுக்கொள்ள வரும்போது நீங்கள் என்னென்ன ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும்.

## புதிய வீட்டுச் சாவியைப் பெற்றுக் கொண்ட பிறகு

### » காரையில்லா சுவர் (ட்ரைவால்) என்றால் என்ன?



காரையில்லா சுவர்கள் என்பவை உங்கள் வீட்டில் உள்ள வறண்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் உட்புறப் பகிர்வுச் சுவர்களாகும். ஒலி உள்ளே புகாமல் இருப்பதற்கான ஒலி காப்புப் பொருட்களால் அவை நிரப்பப்படுகின்றன.

### » எனது வீட்டில் கனரக உபகரணங்களை நிறுவுவது பாதுகாப்பானதா?

உபகரணத்தின் எடை 150 கிலோவுக்குள் இருந்தால் அதை உங்கள் வீட்டில் நிறுவுவது பாதுகாப்பானதாகும். உபகரணத்தின் எடை 150 கிலோவுக்கு மேல் இருந்தால், நீங்கள் அதை நிறுவுவதற்கு முன்னர் வீவக-வின் ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கும்.

### » HFAD நன்றாக வேலை செய்யும் நிலையில் உள்ளது என்பதை என்னால் எப்படி சோதிக்க முடியும்?




சாதனத்தின் முன்புறத்தில் இடம்பெற்றுள்ள Test/Reset பொத்தானை அழுத்துவதன் மூலம் சோதிக்கலாம். HFAD செயல்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒளி ஒளிரும் மற்றும் அலாரம் ஒலிக்கும். சாதனத்தை மீட்டமைக்க, அலாரம் நிறுத்தப்படும் வரை Test/Reset பொத்தானை அழுத்தவும்.

### » எனது வீட்டில் உள்ள காரையில்லா சுவரில் நான் பொருத்திகளைப் பொருத்தலாமா?

பொருத்தமான ஆங்க்கர்களைப் பயன்படுத்துவதன் மூலம், காரையில்லா சுவரில் தொலைக்காட்சிகள் மற்றும் இழுப்பறைகள் போன்ற பொதுவான சாதனங்களை நீங்கள் பொருத்தலாம்! மேலும் தகவல்களுக்கு உங்கள் வீட்டில் உள்ள விரிவான காரையில்லா சுவர் குறித்த பயனர் வழிகாட்டியைப் பாருங்கள்.

### » என்னுடைய ஃபிளாட்டில் வீட்டுத் தீ எச்சரிக்கை கருவி (HFAD) எதற்காக உள்ளது, மற்றும் அது என்ன செய்யும்?




HFAD என்பது உட்கூரையில் நிறுவப்பட்ட ஒரு தானியங்கி புகைக் கண்டுபிடிப்பானாகும். இது புகை கண்டறியப்படும்போது அலாரத்தைத் தூண்டுகிறது. உங்கள் வீட்டில் உள்ள அறிவுறுத்தல் கையேட்டையும் நீங்கள் படிக்கலாம் அல்லது சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படை (SCDF) வலைத்தளத்தை www.scdf.gov.sg/fire-safety-services-listing/home-fire-alarm-device-hfad. -இல் பார்க்கவும்.

புதுப்பிப்புப்பணியின் போது HFAD-இன் மீது பிளாஸ்டிக் தாளைக் கொண்டு தற்காலிகமாக மூடுவது, தூசு படிவதைத் தடுக்கலாம். புதுப்பிப்புப்பணிக்குப் பிறகு தற்காலிக உறையை அகற்றுவதற்கும் மறந்துவிடாதீர்கள்.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## புதிய வீட்டுச் சாவியைப் பெற்றுக் கொண்ட பிறகு

### எனது மர/ வினைல் தளத்தை எவ்வாறு பராமரிப்பது?




மர/ வினைல் தளத்தை நல்ல நிலையில் வைத்திருக்க, அதிகளவு தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம். இலேசான ஈரப்பதமுள்ள துடைப்பானைக் கொண்டு தரையைப் பெருக்குங்கள் அல்லது சுத்தம் செய்யுங்கள், அதுவே போதுமானது. உங்கள் அறைக்கலன்களின் கால்களின் அடிப்பகுதியில் ரப்பர் பட்டைகள் இணைப்பது உங்கள் தளங்களை கீறல்களிலிருந்து பாதுகாக்க உதவும். குறிப்பாக பொருட்களை நகர்த்தும்போது கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள்!

### சேவை முற்றத்தில் / சமையலறையில் உள்ள துணி காயவைக்கும் சட்டத்தை நான் எவ்வாறு பயன்படுத்துவது?

துணி காயவைக்கும் சட்டத்தை நீங்கள் 2 நிலைகளில் கீழே இறக்கிடலாம்:

1. 45˚ கோணத்தில் அதிலுள்ள பட்டையை, சட்டத்தில் உள்ள அம்புகுறி காட்டும் திசையில், இழுப்பதன் மூலம் சட்டத்தின் பூட்டைத் திறக்கவும்.
2. பின்னர் சட்டத்தை மெதுவாக கீழே இறக்கவும்.


இன்னும் உறுதியாகத் தெரியவில்லையா? வழிமுறைக்கான வீடியோவைக் காண உங்கள் வீட்டில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது கட்டடச் சேவை மையத்தில் உதவி கோரவும்.







### எனது வீட்டின் தரையில் பதிக்கப்பட்டிருக்கும் பதிகற்களுக்கு இடையே இடைவெளிகள் இருப்பது இயல்பானதா?



ஆம். பதிகல் சாந்தைக் கொண்டு நிரப்பப்பட்ட இடைவெளிகளானது, வெப்பநிலையில் மாற்றங்கள் இருக்கும்போது பதிகற்களின் இலேசான இயக்கத்தை அனுமதிக்கின்றன. பதிகற்கள் உற்பத்தி செய்யப்படும் போது அவற்றில் ஏற்படக்கூடிய இலேசான மாறுபாடுகளைச் சரிசெய்வதற்கும் இது உதவுகிறது.

### கழிகலன் (WC) நீர்த்தொட்டியின் தண்ணீர் அளவை அதிகரிக்க விரும்புகிறேன். வேறு ஏதேனும் வழி இருக்கிறதா?

நமது தேசிய தண்ணீர்ச் சேமிப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக, வீவக உங்கள் வீட்டில் தண்ணீரைச் சேமிக்கும் வகையிலான கழிகலன் நீர்த்தொட்டிகளை நிறுவியுள்ளது. அவை ஒவ்வொரு முறை தண்ணீரைப் பாய்ச்சிக் கழுவும் போதும் குறைந்த அளவு தண்ணீரையே பயன்படுத்துகின்றன. நீரைப் பாய்ச்சிக் கழுவும் முறையின் பலனும் தண்ணீரின் அளவும் தண்ணீரைச் சேமிப்பதற்கான PUB-இன் தரநிலைகள் மற்றும் தேவைகளுக்கு இணங்க சோதிக்கப்பட்டுள்ளன. இது தண்ணீரைப் பாதுகாக்கவும், உங்கள் தண்ணீர் கட்டணத்தைக் குறைக்கவும் உங்களுக்கு உதவும்.

இருப்பினும், சில குடியிருப்பாளர்களுக்கு எப்போதாவது அதிகமாக தண்ணீரைப் பாய்ச்சிக் கழுவ வேண்டிய அவசியம் ஏற்படலாம். குடியிருப்பாளர்கள் கழிகலனின் பக்கவாட்டுப் பகுதியில் கையில் பிடிக்கக்கூடிய நீர்த் தெளிப்பானை நிறுவி, நீரைப் பாய்ச்சிக் கழுவதற்குக் கூடுதல் வசதியை செய்துகொள்ளலாம். மேலும், அதைக் கழிவறைக் கிண்ணத்தைச் சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.





### உங்கள் UPVC கதவுகளை எப்படி பராமரிக்கலாம்?



UPVC கதவுகள் நீடித்ததும் பராமரிக்க எளிதானதும் ஆகும். அவற்றை சிறப்பாக வைத்திருக்க நீங்கள் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள்: நீண்ட நேரம் நேரடியாக தண்ணீருக்கு உட்படுத்தாமல் இருக்கவும், மேலும் அறையில் நல்ல காற்றோட்டம் இருக்குமாறு உறுதிசெய்க. வீட்டில் புதுப்பிப்பு பணிகள் நடந்து கொண்டிருந்தால், கதவும் கைப்பிடியும் சேதமடையாமல் இருக்க, கட்டிடத் தொழிலாளர்களைச் சொருகி நெளி அட்டை அல்லது குமிழி உறை கொண்டு மூடச் சொல்லலாம்.

உங்கள் புதிய HDB BTO வீட்டின் அம்சங்களைப் பற்றி மேலும் அறிய go.gov.sg/features-of-your-new-flat என்ற இணையதளத்திற்குச் செல்லவும் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

mynicehome ROADSHOW

## உங்கள் புதிய வீட்டை கவனித்துக்கொள்ளுதல்: புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புக் குறிப்புகள்

### » சரியான ஒப்பந்ததாரரை ஈடுபடுத்துதல்

வீவக வீடுகளைப் புதுப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களை மட்டுமே ஈடுபடுத்துங்கள்.

புதுப்பிப்புப்பணி ஒப்பந்ததாரர்களின் விவரத் திரட்டை go.gov.sg/hdb-reno-contractor இணைப்பின் மூலம் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் கண்டறியுங்கள்.

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

புதுப்பிப்புப்பணிக்காக நியமிக்கப்படும் ஒப்பந்ததாரரின் வேலைத் தரம் உள்பட, புதுப்பிப்புப்பணி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் குறித்து அவருடன் பேசி ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள்.

ஒப்பந்ததாரருடன் ஒரு தனிப்பட்ட ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு முன்னர், கீழ்க்கண்டவை உங்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்று ஆராயுங்கள்:

- விலைப்புள்ளி மற்றும் விலை
- பணி நோக்கங்கள்
- நிறைவுசெய்வதற்கான உத்தேசமான கால அளவு

### » பொறுப்புணர்வுடன் புதுப்பித்தல்

மின்தூக்கியின் கதவுகளை மூட முடியாதபடி பொருட்களை அடைத்து வைப்பது, மின்தூக்கிகளைச் சேதப்படுத்தலாம்! மின்தூக்கிகளை முறையாகப் பயன்படுத்துமாறும், மற்ற பயனர்களைக் கருத்தில் கொள்வதற்கும், மேலும் மின்தூக்கிகளைச் சுத்தமாகவும் குப்பைகள் இல்லாமலும் வைத்துக்கொள்வதற்கும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அறைக்கலன்களை ஒப்படைக்கும் தொழிலாளர்களுக்கும் நினைவூட்டுங்கள்.

புதுப்பிப்புப்பணியின் கழிவுகளைக் கழிவுக் கலனில் எறியக் கூடாது. சாக்கடை மற்றும் கழிவறைக் கிண்ணங்களுக்குள் சிதைவுக் கூளங்களைப் போட்டு ஃப்ளஷ் செய்வது அல்லது கழுவுவது, சாக்கடை அமைப்பை அடைத்துச் சேதப்படுத்தும்.



### » சரியாக புதுப்பித்தல்

அங்கீகாரமற்ற புதுப்பிப்புப்பணிகள் ஆபத்தானவையாக இருக்கலாம்! புதுப்பிப்புப்பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர், தேவைப்படும் ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளதை உறுதிசெய்யுங்கள், உதாரணத்திற்குச் சுவர்களை இடிப்பதற்கான ஒப்புதல். ஒப்பந்ததாரர் பணிகளை மேற்கொள்ளும் போது, வீவக-வின் புதுப்பிப்புப்பணிக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்.

புதுப்பிப்புப்பணிக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் தேவைகள் பற்றி go.gov.sg/hdb-reno இணைப்பின் மூலம் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் மேலும் தெரிந்துக்கொள்ளுங்கள்.

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

### » அடிக்கடிப் பராமரிப்பது பணத்தை சேமிக்க உதவும்

வீட்டைச் சிறந்த நிலைமையில் வைத்துக்கொள்வது, எதிர்காலத்தில் செலவு மிகுந்த பழுதுநீக்கங்களைத் தவிர்க்க உதவும்.

உங்களின் சொந்த பழுதுநீக்க ஒப்பந்ததாரரை ஈடுபடுத்துங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் ஒரு நம்பகமான பழுதுநீக்கும் பணியாளர் (ஹேண்டிமேன்) சேவையைப் பரிந்துரைக்குமாறு கேளுங்கள்.

- தேய்ந்த பாகங்களை முன்னதாகவே மாற்றுங்கள்.
- சன்னல்கள் எல்லா நேரங்களிலும் சிறந்த நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்கு, அவற்றை அடிக்கடிச் சோதியுங்கள்.
- வெப்பநிலை மாற்றங்களினால் பொருட்கள் விரிவடைதல் மற்றும் சுருங்குதல் காரணமாக சுவர்கள் வெடிப்பு விடுவதைத் தடுப்பதற்கு, அறைகளை நன்கு காற்றோட்டத்துடன் வைத்துக் கொள்ளுங்கள்.

go.gov.sg/hdb-homecare-guide இணைப்பின் மூலம் அல்லது இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் மேலும் இல்லப் பராமரிப்பு உதவிக்குறிப்புகளைத் தெரிந்துக்கொள்ளுங்கள்.

Upon scanning, you will be directed to a link that contains gov.sg.

## பயனுள்ள தொடர்பு தகவல்

| | |
|---|---|
| » வீவக கிளை சேவை தொலைபேசி எண் | 1800-225-5432 |
| » வீவக விற்பனை / மறு விற்பனை தொலைபேசி எண் | 1800-866-3066<br>go.gov.sg/hdb-write-to-us |

உங்களின் புதிய வீட்டில் நீங்கள் குடியேறுவதற்கு, ஒவ்வொரு புதிய மேம்பாட்டிற்காகவும் கட்டடச் சேவை நிலையம் அமைக்கப்படும். முதல் சாவிகள் வழங்கப்பட்டவுடன் தொடங்கி, ஒரு ஆண்டு காலத்திற்கு இந்நிலையம் இயங்கும். உங்கள் வீடு தொடர்பாக நீங்கள் எவையேனும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால், கட்டடச் சேவை நிலையத்தை அணுகவும்.

